**முதன்மை சார்பு நீதிமன்றம், கரூர்.**

**முன்னிலை:திருமதி.K.L.பிரியங்கா,பி.ஏ.,பி.எல்.,(Hons)**

**முதன்மை சார்பு நீதிபதி, கரூர்.**

திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம், ஆனி மாதம் 23ம் நாள்

2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 07 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**அசல் வழக்கு எண்.681/2023**

**CNR.No.TNKR03-000199-2013**

D. சுப்ரமணியன்

...வாதி

**//எதிர்//**

S.A. அபுதாகீர்

...பிரதிவாதி

இந்த வழக்கு இறுதியாக கடந்த 03.07.2026 என் முன்பாக விசாரணைக்காக வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. S. நவநீதம் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. P. ஜீசஸ் மோரீஸ் ரவி அவர்கள் ஆஜராகியும், அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் வழக்குரை மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும், வாதி தரப்பு வாதத்தை கேட்டும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

தாவா கடன் தொகையான ரூ.7,03,250/-ஐ பிரதிவாதி பின் வட்டியுடன் வாதிக்கு திருப்பி செலுத்த வேண்டும் என்றும், தாவா செலவு தொகைக்காகவும் வாதியால் இவ்வழக்கு தாக்கல்.

**2) அசல் வழக்கின் வழக்குரையின் சுருக்கம்**

பிரதிவாதி, வாதியிடம் கடந்த 15.06.2021ம் தேதியன்று அவரது அவசர நிமித்தம், குடும்பச் செலவிற்காகவும் மற்றும் வியாபாரத்திற்காகவும் ரூ.5,00,000/-த்தினை கடனாக பெற்றுக்கொண்டு மேற்படி தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100க்கு ரூ.0.05 வீதம் வட்டியும் செலுத்துவதாக ஒப்புக்கொண்டும், கடனுறுதிச் சீட்டு எழுதிக்கொடுத்ததாகவும், பின்னிட்டு வாதி பலமுறை பிரதிவாதியிடம் மேற்படி கடன்

அசல் தொகை மற்றும் அதற்குரிய வட்டித்தொகைகளை திரும்ப கேட்டும் இந்நாள் வரை திரும்ப செலுத்தவில்லை என்றும், எனவே, பிரதிவாதி வாதிக்கு வட்டி, அசல் சேர்த்து ரூ.7,03,250/- மற்றும் பின்வட்டி, செலவுத் தொகை தர உத்தரவிடக்கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>**

வழக்கு பொய்யானது. சட்டப்படியும், சங்கதிகளின்படியும் நிலைக்கத்தக்கதல்ல. பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர, இதர சங்கதிகளை வாதியே நிருபணம் செய்யவேண்டும். தாவா கடனுறுதிச்சீட்டு மோசடியானது. பிரதிவாதிக்கு வாதியை யாரென்றே தெரியாது. கடனுறுதிச்சீட்டில் உள்ள கையொப்பம் பிரதிவாதியுடையது அல்ல. அதனால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது.

**<u>4)வழக்குரை, எதிர்வழக்குரை வழக்கோப்பிலுள்ள சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் இந்நீதிமன்றம் கடந்த 09.04.2025 ம் தேதியன்று பின்வரும் எழுவினாக்களை தீர்வுக்காக வனைந்திருந்தது.</u>**

1) Whether the Defendant has executed suit promissory pronote in favour of the plaintiff for consideration?

2) Whether the Plaintiff is entitled to for recovery of the suit amount along with interest from the defendant as prayed for?

3) To what other relief, the plaintiff is entitled to?

5) வாதி தரப்பில் வாதி சுப்ரமணியன் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வாதி தரப்பில் வா.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமோ, சான்றாவணமோ குறியீடு செய்யப்படவில்லை.

**<u>6)எழுவினா- 1 மற்றும் 2:-</u>**

வாதி தரப்பிற்கும் கேட்கை நல்கப்பட்டது. கடந்த 15.06.2021 ம் தேதியன்று பிரதிவாதி வாதியிடத்தில் அவரது அவசர குடும்ப மற்றும் வியாபார செலவிற்காக ரூ.5,00,000/-த்தினை கடனாக பெற்றுக்கொண்டு மேற்படி தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100 க்கு ரூ.0.05 வீதம் வட்டியும் செலுத்துவதாக ஒப்புக்கொண்டும், கடனுறுதிச் சீட்டு

எழுதிக்கொடுத்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அந்த கடனுறுதிச்சீட்டு அவர் மூலம் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்று அறிய முடிகிறது.

7)இத்தருணத்தில் வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் உள்ள கையொப்பம் பிரதிவாதியுடையது என்பதை வாதி நிரூபித்துள்ள நிலையில் மாற்று முறை ஆவண சட்டப் பிரிவு 118 ன் கீழான சட்டப்படியான அனுமானங்கள் வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டை பொறுத்து வாதிக்கு சாதகமாக எழுகிறது. ஆகவே, மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 118 ன் கீழான சட்டப்படியான அனுமானங்கள் வாதிக்கு சாதகமாக எழுகிறது. மேற்படி, சட்டப்படியான அனுமானத்தை மறுத்தலிக்கும் வகையில் பிரதிவாதி தரப்பில் எவ்வித சான்றும் இல்லை. மேலும், பிரதிவாதி வழக்கில் ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளதை கருத்தில் கொண்டும் வாதி தனது வழக்கை தகுந்த ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் மூலமாக நிரூபித்துள்ளதை கருத்தில் கொண்டும் பிரதிவாதி வாதிக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்தாததால் நிலுவை கடன் தொகை ரூ.7,03,250/-ஐ செலுத்த வேண்டிய கடப்பாட்டில் உள்ளார் என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. ஆகவே இந்த எழுவினாக்களுக்கு வாதிக்கு சாதகமாக இந்நீதிமன்றம் விடையளிக்கின்றது.

<u>8) எழுவினா 3 –</u>

முந்தைய எழுவினாக்களிலேயே வாதி கோரியுள்ள பரிகாரங்களில் அவருக்கு கிடைக்கக்கூடிய பரிகாரங்கள் இந்நீதிமன்றத்தால் வழங்கப்பட்டு விடை அளிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த வழக்கைப் பொறுத்து வாதிக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் ஏதும் இல்லை என்று இந்நீதிமன்றம் இந்த எழுவினாவிற்கு விடையளிக்கிறது. வழக்கின் தன்மை, சூழ்நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு வழக்கில் வாதியின் செலவுத்தொகையை பிரதிவாதியே செலுத்த வேண்டுமென்று இந்நீதிமன்றம் மேலும் கூடுதலாக முடிவு காண்கிறது.

9) இறுதியாக பிரதிவாதி, வாதிக்கு ரூ.7,03,250/-ஐ செலுத்த வேண்டும் என்றும், மேற்படி அசல் தொகை ரூ.5,00,000/-க்கு வழக்குரை தாக்கல் செய்த நாள் முதல் தீர்ப்பாணை காலம் வரைக்கும் 9% ஆண்டு வட்டியுடனும், தீர்ப்பாணை தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரைக்கும் 6% ஆண்டு வட்டியுடனும் செலுத்த

வேண்டும் என்று தாவா செலவு தொகையுடன் வாதியின் தாவாவை அனுமதித்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

இத்தீர்ப்பானது, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 07 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K L PRIYANGA Digitally signed by K L PRIYANGA

**முதன்மை சார்பு நீதிபதி,**
**கரூர்.**

**வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**

| | |
|---|---|
| வா.சா.1 | சுப்ரமணியன் (வாதி) |

**வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | 15.06.2021 – பிரதிவாதி, வாதிக்கு எழுதிக்கொடுத்த கடனுறுதிச்சீட்டு அசல் |

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை.**

K L PRIYANGA Digitally signed by K L PRIYANGA

**முதன்மை சார்பு நீதிபதி,**
**கரூர்.**